Primrose Schools
ICSE Curriculum
(A Unit of Primrose Educational Trust, Chennai)
An ISO 9001:2015 Certified Institution

State Purpose of Worksheet – மாதிரி வினாத்தாள் 1[2019 – 2020]

[KG Class work/Home Assignment/Alternate Class work/ Revision Test/Internal Assessment/Formative Assessment/ Summative Assessment/Preboard]

Name:	**Std: V**	**Subject: தமிழ் L2**
Date:	**Term: I**	**Topic: NA**
Maximum Marks:40	**Time Duration: $1^3/_4$ hr**	**Type of Assessment (if internal assessment):NA**

அ) பொருளுணர்ந்து விடை தருக

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன் மீது போர் தொடுக்கும் முன்பு பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தை விட்டுப் புறத்தே போய் விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இச்செய்தி முதுகுடுமிப் பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்னும் புலவர் பாராட்டுகிறார். மேலும், படையெடுத்து வரும் பகைவன் மீது, மறைந்து நின்று அம்பு எய்தும் நிலையங்கள் ‘ஞாயில்கள்’ என்று அழைக்கப்பட்டன.

வினாக்கள்:

1. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? **[1]**

2. நெட்டிமையாரால் பாராட்டப்படும் அரசர் யார்? **[1]**

3. ‘ஞாயில்கள்’ என்றால் என்ன? **[1]**

4. ‘பகைவன்’ இச்சொல்லுக்கு உரிய எதிர்ச்சொல் என்ன? **[1]**

5. ‘பிணி’ என்பதன் பொருள் என்ன? **[1]**

ஆ) அடிக்கோடிட்ட சொற்களுக்கு உரிய பொருளினைத் தேர்வு செய்க [5×1=5]

1. ;<u>வான்</u>’ என்னும் சொல்லின் பொருள்_________

அ) நிலம் ஆ) வானம் இ) பூமி ஈ) கடல்

2. '<u>பார்</u>' இச்சொல்லின் பொருள் __________

அ) மலை ஆ) மாதம் இ) உலகம் ஈ) கண்டம்

3. '<u>இல்லார்</u>' இச்சொல்லின் பொருள் __________

அ) செல்வர் ஆ) முதலாளி இ) இல்லாதவர் ஈ) பணம்படைத்தவர்

4. 'மேன்மை' இச்சொல்லின் பொருள் _________

அ) தாழ்வு ஆ) வீழ்ச்சி இ) உயர்வு ஈ) வீழ்தல்

5. 'தீர்ப்பு' இச்சொல்லின் பொருள் __________

அ) வாதம் ஆ) முடிவு இ) சண்டை ஈ) வழக்கு

இ) அடிக்கோடிட்ட சொற்களுக்கு உரிய எதிர்ச்சொல்லை எழுதுக [3×½=1½]

1. <u>பழைமை</u> இச்சொல்லின் எதிர்ச்சொல் ________

அ) கடுமை ஆ) பழையது இ) புதுமை ஈ) பதுமை

2. <u>இம்மை</u> இச்சொல்லின் எதிர்ச்சொல் ____________

அ) இப்பிறப்பு ஆ) உலகம் இ) மறுமை ஈ) இயலாமை

3. <u>நன்மை</u> இச்சொல்லின் எதிர்ச்சொல் _________

அ) நன்றி ஆ) தீமை இ) நல்வழி ஈ) நன்றிக்கடன்

ஈ) பின்வரும் உயிரினங்களுக்கு உரிய ஒலிகளை எழுதுக. [4×½=2]

1. அணில் __________
2. நரி __________
3. சிங்கம் __________
4. கழுதை ___________

உ) பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுக [3×1=3]

1. போட்டில் பயணம் செய்தால் மிகவும் ஹப்பி ஆக இருக்கும்
2. நேற்று என் டாடியுடன் வாக்கிங் சென்றேன்
3. ஹார்பரில் லைட்ஹவுஸ் இருக்கும்

ஊ) பொருத்துக **[5×½=2½]**

1. நீர்	பறித்தான்
2. முறுக்கு	எய்தான்
3. உணவு	குடித்தான்
4. அம்பு	தின்றான்
5. பூ	உண்டான்

எ) பின்வரும் சொற்களை வாக்கியத்தில் எழுதுக **[4×1=4]**

1. தங்கம் 2. அமைதி 3. முழக்கம் 4. கூட்டமாக

ஏ) முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக **[4×1=4]**

1. கற்றிட வேண்டும் கல்வியைக் கசடற
2. தந்தையும் தெய்வம் அன்னையும்
3. மனுநீதிச் சோழன் மன்னன் சோழமன்னர்களுள் புகழ் வாய்ந்த
4. காற்சிலம்பு உடையது கண்ணகியின் மாணிக்கப் பரல்கள்

ஐ) உன் ஊரில் சாலை வசதி வேண்டி ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கடிதம் எழுதுக. [5]

ஒ) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக **[4×2=8]**

1. மரபு என்றால் என்ன?
2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறாள்?
3. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?
4. ‘கல்விச்செல்மே சிறந்த செல்வம்’ என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை எழுதுக